OS: 616/2018

Date: 14.09.2021

பெயர் : மாணிக்கம்

**வாதி தரப்பு சாட்சி 3 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - பிரதிவாதி தரப்பில்**

எனது முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. சாட்சி மீண்டும் வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டதாக கூறுகிறார். வாதிதான் என்னை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கூட்டிசென்றார். முதல் விசாரணை வாக்குமூலத்திற்கான விவரங்களை நானும், வாதியும்தான் வழக்கறிஞருக்கு தெரிவித்தோம். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான சங்கதிகளை முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் என்ன சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். தாவாவில் 5 செண்ட் நிலம் மற்றும் பொது அதிகார ஆவணம் காட்டப்பட்டுள்ளது. அந்த 5 செண்ட் நிலம் பொது அதிகார ஆவணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் வீடு உள்ளதா என்றால் ஒரு தார்சு வீடு மற்றும் அட்டை வீடு உள்ளது. பொது அதிகார ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தி கொடுத்ததால் ஆவணத்தில் கட்டிடங்கள் உள்ள விவரம் சொல்லப்படவில்லை. தாவாவில் தாவா சொத்தில் உள்ள வீடுகள் காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தார்சு வீடு மற்றும் அட்டை வீட்டின் மதிப்பு சுமார் ரூ.10,00,000/- இருக்கும், நிலத்தின் மதிப்பு சுமார் ரூ.30,00,000/- இருக்கும். பொது அதிகார ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பே தாவா சொத்தில் வீடுகள் இருந்தன. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள பஞ்சாயத்திற்கு குமார் மற்றும் தங்கராஜ் அழைத்ததன்பேரில் சென்றேன். பொதுவாக பஞ்சாயத்து நடைபெற்றால் எந்த தேதியில் யார் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது என பஞ்சாயத்து முச்சாலிக்கா ஏற்படுத்திக்கொள்வது உண்டு என்றால் சாட்சி அவ்வாறு யாரும் எழுதிக்கொள்வதில்லை என்று கூறுகிறார். நான் சொல்வது போல் எவ்வித பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றும், உண்மையில் நடைபெற்றிருந்தால் முச்சாலிக்கா ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எந்த தேதியில் பஞ்சாயத்து நடைபெற்றது, யார் முன்னிலையில் நடைபெற்றது என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் கடனுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம்

எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். பொது அதிகார ஆவணம் ஏற்படும்போது நான் பத்திர அலுவலகத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். பொது அதிகார ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. பொது அதிகார ஆவணத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டிருந்து என்று எனக்கு தெரியும். பொது அதிகார ஆவணத்தில் தவறான சங்கதிகள் எழுதப்பட்டால் அது குறித்து நான் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். கடனுக்காக ஆவணம் எழுதப்பட்டதால் அது அவ்வாறே பதிவு செய்யப்பட்டது. நான் உண்மையில் கடனுக்காகன பொது அதிகார ஆவணம் எழுதப்பட்டிருந்தால் நான் சார் பதிவாளரிடம் ஆட்சேபனை தெரிவித்திருப்பேன் என்றும், நான் வாதிக்காக பொது அதிகார ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் ஏற்பட்டபோது நான் பத்திர அலுவலகத்தில் இல்லை என்றும், வாதிக்கு சாதகமாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒப்பம்/PW3

ஒப்பம் / சார்பு நீதிபதி, ஓமலூர்,